ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 3 | மார்ச் 1998 | கானம் : 8

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 3 மார்ச் 1998 கானம் : 8

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 28 | 5 |
| 3. | ப்ரணய கீதம் | 7 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 9 | 11 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி | 13 |
| 6. | ஏகாதஸீ மாஹாத்ம்யம் | 15 |
| 7. | வேத கதைகள் - 10 | 19 |
| 8. | நாரத பக்தி ஸூத்ரம் - 2 | 21 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 5 | 27 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 31 | 29 |
| 11. | செய்திகள் | 32 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : அடானா தாளம் : ஜம்பை

*நாம மஹிமையை உரைத்திடுவேன் கேளீர்*
*பதிதனையும் பரம பாவனமாக்கிடும் - ஹரி (நாம)*

*அஸுரர் குலத்தில் பிறந்தும் ஸங்கடங்கள் பல விளைந்தும்*
*தேவல நாரதரின் அருளை அடைந்து*
*எட்டெழுத்து மந்திரத்தை தட்டாமல் தானுரைத்து*
*கிட்டாத பேற்றை ஒருவன் அடைந்தானல்லவோ (நாம)*

*அலைந்து திரிந்து ஒருவன் கொலை தொழிலே புரிந்து*
*தாரக மந்திரம் ஜபித்தானல்லவோ*
*நாம பலத்தினால் ஆதி காவ்யம் செய்து*
*நாம் எல்லோரும் வணங்கும் முனிவனும் ஆனான் (நாம)*

*உத்தம குலத்தில் பிறந்து தகாதனவெல்லாம் செய்தும்*
*அந்திம காலத்தில் அழைத்தானல்லவோ*
*(தன் புத்திரனை அழைத்தானல்லவோ)*
*புத்திரன் நாமமும் நாரணன் நாமம் ஆனதால்*
*ஹரி வந்து கொண்டோடி சென்றானல்லவோ (நாம)*

*கண்ணனின் நாமத்தை திண்ணமுடன் சொல்லி வந்த*
*அந்தணன் எண்ணமும் ஈடேறியதன்றோ*
*பண்ணிலே பரமனைப் பாடும் முரளீதரனுக்கும்*
*பகவன் நாமமே கதியன்றோ (நாம)*



ஸமீபத்தில், பெங்களூரில் நடைபெற்ற ப்ரஸ்தானத்ரய பாஷ்ய ஸதஸில்,
காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் நம் ஸ்வாமிகளும்.

## 28

சென்ற வருடம், ஸ்ரீ மஹாபெரியவாளின் ஆராதனையை ஒட்டி, சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரியில், ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ் நடைபெற்றது. அச்சமயத்தில், ஆசார்யாளின் பாதுகைகளுக்கு நூற்றியெட்டு ஶால்வைகளினால் அர்ச்சனை செய்யப்பட்டது. அந்த ஸதஸிற்கு பெங்களூரிலிருந்து ஸ்ரீமான் பாலக்ருஷ்ணன் அவர்கள் வந்து கலந்து கொண்டார்கள். ஸ்வாமிகள் அவரிடம், அடுத்த வருடம் இது போன்ற ஒரு ஸதஸை பெங்களூரில் நடத்த வேண்டும் என்று தனது விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

பெங்களூரில், ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் ஜயந்தி ஸபா டிரஸ்ட் என்றொரு ஸபை நடந்து வருகின்றது. அச்சபையின் மூலம் இவ்வருடம் பெங்களூரில் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ் நடத்துவதற்கு ஏற்பாடாகியது. நம் ஸ்வாமிகளிடம் அவர்கள் அவ்வப்பொழுது ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி மேற்படி ஸதஸை இந்த வருடம் பெங்களூர் மல்லேஸ்வரத்தில் உள்ள உபய வேதாந்த ஸபாவைச் சேர்ந்த கல்யாண மண்டபத்தில் நடத்தினார்கள். ஜனவரி மாதம் 23, 24, 25, 26 தேதிகளில், நம் ஸ்வாமிகள் முன்னிலையில், மேற்படி ஸதஸ் நடைபெற்றது.

காலை 8 மணி முதல் ஆரம்பித்து, ஆசார்யாளின் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயணம் நடைபெற்றது. பிற்பகல், வித்வான்களால் வாக்யார்த்தம் நடைபெற்றது. மாலை வேளையில், ஶங்கர பாஷ்யங்களிலிருந்து வித்வான்கள் கன்னடம், தமிழ் இவ்விரண்டு மொழிகளில் உபன்யாஸம் நிகழ்த்தினார்கள். பூர்த்தி தினமான 26-ந்தேதி அன்று, காலையில் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் மேற்படி ஸதஸிற்கு விஜயம் செய்து அனுக்கிரஹ பாஷணம் செய்தும், வித்வான்களின் வாக்யார்த்தத்தில் சிறிது நேரம் கலந்து கொண்டு அனுக்கிரஹம் செய்ததும், மிகவும் பாக்கியமே. வித்வான்களை கௌரவிப்பதைக் கண்டு அவர்கள் மிகவும் ஸந்தோஷித்தார்கள்.

அன்று மாலை, ஆசார்யாளின் திரு உருவப்படத்தை சிறிய ரதத்தில் அழகாக அலங்கரித்து, வேத பாராயணம், நாம ஸங்கீர்த்தனம், மங்கள வாத்யங்களுடன் புறப்பாடு செய்யப்பட்டது.

பெங்களூரில், ஸகல ஸத்கார்யங்களுக்கும் ப்ரவர்த்தகராக இருக்கும், ஸ்ரீமான் மூர்த்தி அவர்களின் ஓயாத ப்ரயத்தனமே இந்த ஸதஸ் நன்றாக அமைந்ததற்கு காரணம் என்று நம் ஸ்வாமிகள், ஸ்ரீ மூர்த்தியை கொண்டாடினார்கள். கர்நாடகம், தமிழகம் இரண்டு மாநிலங்களிலிருந்து சுமார் இருபது வித்வான்கள் கலந்து கொண்டு ஸபையை கௌரவித்தார்கள். இது போலவே, அடுத்த வருடம் மும்பையில், (Mumbai) வேத ரக்ஷணநிதி டிரஸ்ட் ஸ்ரீ ராஜகோபாலய்யரைக் கொண்டு ஒரு ஸதஸை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்திரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில், ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்னைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை இது விஷயமாக தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

# ப்ரணய கீதம்

**ஸ்ரீமத் பாகவதம் – தஶம ஸ்கந்தம் – பூர்வார்த்தம் – 29-வது அத்யாயம்**

## கோப்ய ஊசு :

மைவம் விபோSர்ஹதி பவான் கதிதும் ந்ருஶம்ஸம்
ஸந்த்யஜ்ய ஸர்வ விஷயான்ஸ்தவ பாதமூலம் ।
பக்தா பஜஸ்வ துரவக்ரஹ மா த்யஜாஸ்மான்
தேவோ யதாSSதிபுருஷோ பஜதே முமுக்ஷூன் ॥ 1

யத்பத்ய பத்ய ஸுஹ்ருதாம் அனுவ்ருத்திரங்க
ஸ்த்ரீணாம் ஸ்வதர்ம இதி தர்மவிதா த்வயோக்தம் ।
அஸ்த்வேவமேதது பதேஶ பதே த்வயீஶே
ப்ரேஷ்டோ ா பவாம்ஸ்தனுப்ருதாம் கில பந்துராத்மா ॥ 2

குர்வந்தி ஹி த்வயி ரதிம் குஶலா: ஸ்வ ஆத்மன்
நித்யப்ரியே பதிஸுதாதிபிரார்த்திதை: கிம் ।
தன்ன: ப்ரஸீத பரமேஶ்வர மா ஸ்ம சிந்த்யா
ஆஶாம் ப்ருதாம் த்வயி சிராதரவிந்தநேத்ர ॥ 3

சித்தம் ஸுகேன பவதா அபஹ்ருதம் க்ருஹேஷு
யந்நிர்விஶத்யுத கராவபி க்ருஹ்ய க்ருத்யே ।
பாதௌ பதம் ந சலதஸ்தவ பாத மூலாத்
யாம: கதம் வ்ரஜமதோ கரவாம கிம் வா ॥ 4

ஸிஞ்சாங்க நஸ்த்வததராம்ருத பூரகேண
ஹாஸாவலோக கலகீத ஜஹ்ருச்சயாக்னிம் ।
நோ சேத் வயம் விரஹஜாக்ன்யுபயுக்த தேஹா
த்யானேன யாம பதயோ: பதவீம் ஸகே தே ॥ 5

யர்ஹி அம்புஜாக்ஷ தவ பாததலம் ரமாயா:
தத்தக்ஷணம் க்வசிதரண்ய ஜன ப்ரியஸ்ய ।
அஸ்ப்ராக்ஷ்ம தத் ப்ரப்ருதி நாந்ய ஸமக்ஷமங்க
ஸ்தாதும் த்வயா பிரமிதா பத பாரயாம: ॥ 6

ஶ்ரீர்யத் பதாம்புஜரஜஶ்சகமே துலஸ்யா
லப்த்வாபி வக்ஷஸி பதம் கில ப்ருத்யஜுஷ்டம் ।
யஸ்யா: ஸ்வ வீக்ஷணக்ருதேSன்ய ஸுர ப்ரயாஸ:
தத்வத் வயம் ச தவ பாதரஜ: ப்ரபன்னா: ॥ 7

*தந்த: ப்ரஸீத வ்ருஜினார்தன தேஷ்ங்க்ரிமூலம்*
*ப்ராப்தா விஸ்ருஜ்ய வஸதீஸ்வதுபாஸனாஶா: ।*
*த்வத் ஸுந்தரஸ்மித நிரீக்ஷண தீவ்ரகாம*
*தப்தாத்மனாம் புருஷபூஷண தேஹி தாஸ்யம் ॥* 8

*வீக்ஷ்ய அலகாவ்ருத முகம் தவ குண்டலஶ்ரீ-*
*கண்டஸ்தலாதரஸுதம் ஹஸிதாவலோகம் ।*
*தத்தாபயம் ச புஜதண்டயுகம் விலோக்ய*
*வக்ஷ: ஶ்ரியைகரமணம் ச பவாம தாஸ்ய: ॥* 9

*கா ஸ்த்ர்யங்க தே கலபதாயத மூர்ச்சிதேன*
*ஸம்மோஹிதாSSர்யசரிதான் ந சலேத் த்ரிலோக்யாம் ।*
*த்ரைலோக்ய ஸௌபகமிதம் ச நிரீக்ஷ்ய ரூபம்*
*யத் கோத்விஜ த்ரும ம்ருகா: புலகான்யபிப்ரன் ॥* 10

*வ்யக்தம் பவான் வ்ரஜபயார்த்திஹரோSபிஜாதோ*
*தேவோ யதா SSதிபுருஷ: ஸுரலோக கோப்தா ।*
*தந்நோ விதேஹி கரபங்கஜமார்த்த பந்தோ*
*தப்தஸ்தனேஷு ச ஶிரஸ்ஸு ச கிங்கரீணாம் ॥*

ஶரத்ருதுவால் மலர்ந்த மல்லிகை புஷ்பங்களையுடைய ராத்ரியில், ராஸக்ரீடை செய்வதற்காக கண்ணன் வேணுகானம் செய்த பொழுது, அந்த மதுரமான கானத்தைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணனால் கவரப்பட்ட மனதையுடையவர்களான கோபிகா ஸ்த்ரீகள், கண்ணன் இருக்கும் இடத்திற்கு வேகத்தால் தன்னிலையை மறந்தவர்களாய் புறப்பட்டு வந்தார்கள். அப்பொழுது, அந்த கோபிகா ஸ்த்ரீகளை பார்த்து, ஸ்ரீ க்ருஷ்ண பகவான், 'கணவர், குழந்தைகள் மற்றும் பந்துக்களையும் விட்டு, ஸ்த்ரீகள் இந்த கோரமான ராத்திரியில் வருவது உசிதமில்லை' என்று கூறி, அவர்களை கோகுலத்திற்கு திரும்பச் செல்லும்படி சொன்னார். மிகவும் ப்ரியமானவரும், ப்ரியமில்லாதவர் போல் பேசுகின்றவருமான ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்த்து, ஸ்ரீ க்ருஷ்ணனை அடைவதற்காக மற்ற எல்லா விருப்பங்களையும் இழந்தவர்களும், ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மிகவும் ஆசை கொண்டவர்களுமான கோபிகைகள், அழுவதால் கண்ணீர் நிறைந்து பார்வையிழந்த கண்களை துடைத்துக் கொண்டு, கொஞ்சம் கோபத்தால் தழுதழுத்த குரலை உடையவர்களாக பின்வருமாறு சொன்னார்கள் :-

ஹே பிரபுவே! இவ்விதம் கோரமான வார்த்தையை சொல்ல தாங்கள் தகுதியுற்றவரன்று. எல்லா விஷய ஸுகங்களையும் தள்ளிவிட்டு

தங்கள் பாதமூலத்தை ஸேவித்திருக்கும் எங்களை கைவிடாதீர். ஏ ஸ்வதந்திரரே! ஸ்வயம் ப்ரகாசியான புருஷோத்தமன், மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு அந்த மோக்ஷத்தை கொடுத்து, எங்ஙனம் அவர்களை கைவிடாமல் காக்கிறாரோ, அதுபோல், எங்களுடைய விருப்பத்தையும் பூர்த்தி செய்து எங்களையும் கைவிடாமல் காக்க வேண்டும்.

ஐயா! தர்மங்களையெல்லாம் அறிந்த தங்களால் கணவர்கள், குழந்தைகள், பந்துக்கள் இவர்களுக்குப் பணிவிடை செய்வதென்பதுதான் ஸ்த்ரீகளுக்கு ஸ்வதர்மம் என்று சொல்லப்பட்டது. அது மிகவும் சரியே. இந்த பணிவிடையானது, பணிவிடை செய்யத் தகுந்தவர்களென்று உபதேசஞ் செய்யப்படுகிற கணவர் முதலியவர்களுக்கு அதிஷ்டான பூதரான ஸர்வேச்வரனான தங்களிடத்திலேயே நடக்கட்டும். ஏனென்றால், தாங்களேதான் சரீரம் பெற்ற ஸமஸ்த பிராணிகளுக்கும் மிக ப்ரியமுள்ள பந்துவாகவும் ஆத்மாவாகவும் விளங்குகிறீர்.

தனது ஆத்மாவுக்கு வேண்டிய நன்மைகளை ஸம்பாதிப்பதில் ஸமர்த்தர்களான ஜனங்கள், எப்பொழுதும் ப்ரியராகவே இருக்கும் தங்களிடத்திலல்லவா அன்பு வைக்கிறார்கள். ஆகையால், எப்பொழுதும் வருத்தங்களையே கொடுக்கின்ற கணவர், பிள்ளைகள் இவர்களால் என்ன ப்ரயோஜனம்? ஆகையால், ஹே பரமேச்வர! எங்களுக்கு ப்ரஸாதத்தை செய்ய வேண்டும். ஹே! தாமரைக்கண்ணா! வெகு நாளாக தங்களிடம் வைத்திருக்கும் ஆசையை கெடுக்க வேண்டாம்.

எந்த, எங்களுடைய மனதானது வீட்டு வேலைகளில் சென்று கொண்டிருந்ததோ, அது ஸுகஸ்வரூபியான தங்களால் கவரப்பட்டது. அதுவுமில்லாமல், வீட்டு வேலைகளை செய்து வந்த இரு கைகளும் தங்களால் வேலை செய்யாமல் தடைபட்டன. எங்கள் கால்களிரண்டும், தங்கள் பாதமூலத்தை விட்டு ஓரடியும் வைப்பதில்லை. எவ்விதம் கோகுலம் செல்வோம்? ஆகையால் என்ன செய்வோம்?

அப்பா! ஹே தோழனே! உன் புஞ்சிரிப்புடன் கூடிய பார்வையாலும், இனிய பாட்டினாலும் உண்டான எங்களுடைய மன்மதாக்னியை தங்களுடைய அதராமிருதத்தின் பெருக்கால் அணைத்துவிடும். அப்படி செய்யாவிடில், உம்முடைய விரஹத்தினால் உண்டாகிய அக்னியில் எங்கள் உடல்களை தஹிப்பித்து, த்யானத்தால் உமது திருப்பாதங்களுடைய ஸன்னிதானத்தை அடைவோம்.

தாமரைக்கண்ணனாகிய ஹே கண்ணா! லக்ஷ்மீ தேவிக்கும் ஒரு காலத்தில் ஸந்தோஷத்தை கொடுத்ததான, வனத்தில் வஸிக்கும் ஜனங்களை ப்ரியமாக உடைய தங்களுடைய பாதத்தை எப்பொழுது

தொட்டோமோ, அப்பொழுது முதல் தங்களால் ஆனந்தமடைவிக்கப் பட்டவர்களாய் வேறொருவருடைய முன்பு நிற்கவும் சக்தி அற்றவர்களாகிறோம்.

எந்த லக்ஷ்மீ தேவியை, ப்ரஹ்மா முதலிய மற்ற தேவர்கள், தங்களை ஒரு தடவை கடைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்று தவம் புரிகிறார்களோ, அந்த லக்ஷ்மீ தேவி தங்களுடைய மார்பில் ஏகாந்தமான ஸ்தானத்தை அடைந்தும் கூட, பக்தர்களால் ஸேவிக்கப்பட்ட எந்த தங்களுடைய திருமலரடிகளை துளஸியுடன் கூட அடைய விரும்பினாளோ, அதுபோலவே, நாங்களும் தங்கள் பாததூளியை அடைய வந்திருக்கிறோம்.

ஆகையால், துக்கங்களை போக்கடிக்கின்ற ஹே க்ருஷ்ணா! வீடுகளை விட்டு, தங்களை ஸேவிப்பதிலேயே ஆசையுடையவர்களாய் தங்கள் பாதமூலத்தை அடைந்திருக்கும் எங்களுக்கு ப்ரஸாதம் செய்ய வேண்டும். ஹே புருஷோத்தம! தங்களுடைய அழகிய சிரிப்புடன் கூடிய பார்வையாலுண்டாகிய வக்கிரமான காமாக்னியால் தகிக்கப்படும் எங்களுக்கு ஊழியத்தை தந்தருளும்.

குண்டலங்களால் அழகு வாய்ந்த கன்னங்களையுடையதும், அதரங்களில் அமிருதத்தையுடையதும், சிரிப்போடு கூடிய பார்வை உடையதுமான தங்களுடைய சூர்ணகுந்தலங்களால் மறைந்த முகத்தை பார்த்தும், அபயதானம் செய்த இரண்டு துண்டம் போன்ற கைகளையும் லக்ஷ்மீதேவிக்கு விளையாட முக்கியமான இடமாகிய மார்பையும் பார்த்து நாங்கள் தங்களுக்கு அடிமைகளாக ஆகிறோம்.

ஹே க்ருஷ்ணா! எந்த தங்களுடைய ரூபத்தை பார்த்தும், வேணுகானத்தை கேட்டும், பசுக்களும், பறவைகளும், மரங்களும், மான்களும், ரோமாஞ்சமடைந்தனவோ, அப்படிப்பட்ட தங்களுடைய அவ்யக்த மதுரமான பதங்களுடைய நீண்ட ஸ்வராலாபத்தாலும் மூவுலகங்களிலும் மிக அழகான இந்த ரூபத்தை பார்த்தும், மூவுலகங்களிலும், நன்றாக மோஹமடைந்த எந்த ஸ்த்ரீதான் நன்னடத்தையினின்று விலகமாட்டாள்.

ஹே ஆபத்பாந்தவ! ஆதிபுருஷனாகிய மஹாவிஷ்ணு, தேவலோகத்தைக் காப்பாற்ற உபேந்திரனாக அவதரித்ததுபோல தாங்கள் கோகுலத்தின் பயங்களையும் கஷ்டங்களையும் போக்கடிப்பவராக திருவவதாரம் செய்திருக்கிறீர்; இது நிச்சயம். கையால், தங்களுடைய வேலைக்காரிகளான எங்களுடைய மன்மததாபமுடைய ஸ்தனங்களிலும் தலைகளிலும் தங்களுடைய தாமரைப் போன்ற திருக்கையை வைத்தருள வேண்டும். ■

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும்-9

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
**A. சுந்தரேச ஸர்மா வாஜபேயயாஜி**

## பூரம்

சுக்கிரனது நக்ஷத்ரம் பூரமாகும். இது உயர்ந்த நக்ஷத்ரமாகும். பூரத்தில் ஒரு பிள்ளை இருந்தால் பூர்ணத்தை அடையலாம் என்று ஒரு பழமொழி உண்டு. பொதுவாக, நற்காரியங்களுக்கு முப்பூரம் அதாவது பூரம், பூராடம், பூரட்டாதி விலக்கத்தக்கது என்றுள்ளது. இருப்பினும், ஜனன விஷயம் வேறு. ஆகாயத்தில் இரண்டு நக்ஷத்ரங்களால் இரண்டு கட்டில் கால்கள் போல் அடையாளம் காட்டப்படுகிறது. வைகாசி மாதம் 11-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை இந்த நக்ஷத்ரத்தை ஆகாயத்தில் காணலாம் என வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகின்றனர். பூர நக்ஷத்ரம் சிம்ம ராசிக்கானது. அதன் தேவதை அர்யமா எனும் ஸூர்யனை குறிக்கிறது. தூம்ரவர்ணணாகவும், தேரில் ஏறியவராகவும், சக்தி என்ற ஆயுதத்தை கையில் ஏந்தி இருப்பவர் அர்யமா.

அர்யமா என்ற தேவதையைக் குறித்து வேதத்தில், ''யார் கொடுப்பினையையே வ்ரதமாக கொண்டிருக்கிறானோ அவன் அர்யமா'' என்று உயர்வாகச் சொல்லப்படுகிறது. பூர நக்ஷத்ரத்தில் ஜனித்தவர் தானத்தில் மிகச் சிறந்தவராக விளங்குவர். எல்லோரிடமும் நண்பனாகப் பழக ஆசைப்படுவர். இனிமையாக பேசுவர். முகத்தில் காந்தியுடனிருப்பர். இவர்களிடம் ஏதாவது ஒரு விஷயத்தில் உச்சம் என்பது குடி கொண்டிருக்கும். ஊர் ஊராகச் செல்வதில் மிகவும் ப்ரியம் கொண்டவர்கள்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கு சேவை செய்வதில் மிகவும் ப்ரியம் கொண்டிருப்பர். தாயார், தகப்பனார்களிடம் கட்டுப்பட்டவராகவும் இருப்பர். மந்த்ரங்களை உபாஸித்து மற்றவர்களுக்கும் போதிப்பர். தன்னை குறைவு படுத்துகிறார்களோ என்ற தாழ்வு மனப்பான்மையும் இவர்களின் உடன்பிறப்பு. செல்வமும், செழிப்பும் இவர்களிடம் குறைவின்றி இருக்கும். எனினும், கர்வத்தாலும் தடுமாற்றங்களாலும் அதை சரியானபடி உபயோகிக்க சிலர்

தவறுவார்கள். இவர்களது வாழ்க்கையில் ஸ்த்ரீகள் மேலோங்கி இருப்பார்கள். எல்லாம் நன்மைக்கே என்ற மனப்பான்மையால் இவர்கள் முன்னேறுவார்கள். அதிகமாக பசியும், தாகமும் இவர்களுக்கு இருக்கும். படிப்பில் முனைந்தால் இவர்களால் ஸாதிக்க முடியாததே இருக்காது. தனக்கென்று ஒரு வழியை உண்டாக்கிக் கொள்வதில் இவர்களிடம் நாட்டம் உண்டு. பசு முதலான ப்ராணிகளிடத்தில் ப்ரியம் கொண்டவர்கள். இவர்கள் எப்பொழுதும் ஸூர்யனை உபாஸித்து வர வேண்டும். அப்பொழுது நேத்திரங்களுக்கு பாதகம் வராது.

பூர நக்ஷத்ரகாரர்களுக்கு நிறைய நண்பர்கள் இருப்பார்கள். அதனால், பல கார்யங்களை ஸாதிக்கும் வாய்ப்பு இவர்களுக்கு உண்டு. ஸௌக்யமாக இருக்க அதிகம் விரும்புவது இவர்களது தோஷம். இதனால், எதிலும் தாமதம் என்பதை இவர்களால் தவிர்க்க முடியாது. இவர்கள், அம்பாளை உபாஸிப்பதால் மிகவும் நன்மையடைவார்கள்.

இவர்களது நக்ஷத்ர யாகத்திற்கு ஸுத்தமான ஹவிஸ் ப்ரதானத்ரவ்யம். அதில், பசுக்களுக்கு அதிபதியானவரும், பூர நக்ஷத்ர தேவதையானவரும், தேவர்களுக்கு ஹவிர்பாகங்களை அளிக்கத் தேவையான ஐஶ்வர்யத்தை அளிப்பவர்களுமான தங்களுக்கு ஹவிர்பாகத்தை அளிக்கிறோம். தாங்கள், எங்களுக்கு நிறைய ஆயுளையும் தங்களது குணங்கள் யாவற்றையும் எங்களுக்கு அளிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகின்றன. நிறைய பசுக்களுக்கு அதிபதியாகும் தன்மை பூர நக்ஷத்ர யாகத்தால் கிடைக்கின்றது. ■

---

அறிவிப்பு :

1. ''ஸ்ரீ குருஜியின் கீர்த்தனங்கள்'' அடங்கிய காஸெட்டுகள் இரண்டு பாகங்கள் வெளி வந்துள்ளன.
2. பகவான் ஸ்ரீரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மணமாலை'' ஸ்ரீ குருஜியின் உபன்யாஸ கேஸட்டுகள் - மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன.
3. மதுரமுரளி July '95 - June '97 இரண்டாண்டு இதழ்கள், இரண்டு பாகங்களில் 'Bind' செய்யப்பட்டு வெளிவந்துள்ளன.

இவை சென்னை ப்ரேமிக பவனில் கிடைக்கும்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி

*கேள்வி : சிலர், தங்கள் கஷ்ட நிவர்த்திக்காக பகவானிடம் பலவிதமான ப்ரார்த்தனைகளை செய்து கொள்கின்றனர். ப்ரார்த்தனை நிறைவேறியதும், தாங்கள் நேர்ந்து கொண்டதற்கு பதில் வேறு விதமாக ப்ரார்த்தனையை நிறைவேற்றுகின்றனர். இது சரியாகுமா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : இதை இன்னும் விளக்கமாக கேட்கவும்.

*கேள்வி : திருப்பதி ஏழுமலையானுக்கு கல்யாண உத்ஸவம் நடத்துவதாக வேண்டிக் கொண்டார்கள், அதற்கு பதிலாக, அதற்கான தொகையை உண்டியலில் செலுத்தி விடுவது சரியா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : தவறு. நாம் எப்படி செய்வதாக ப்ரார்த்தித்துக் கொண்டோமோ, என்ன செய்வதாக ப்ரார்த்தித்துக் கொண்டோமோ, அதன்படிதான் ப்ரார்த்தனையை நிறைவேற்ற வேண்டும்.

*கேள்வி : ஸ்த்ரீகள் அங்க ப்ரதக்ஷிணம் செய்யலாமா?*

பதில் : ஸ்த்ரீகளின் ஸர்வ அங்கங்களும் பூமியில் படக்கூடாது என்று சொல்வார்கள். ஆகவே, ஸ்த்ரீகள் அங்கப்ரதக்ஷிணம் செய்வது சரியாகாது.

*கேள்வி : ஸ்த்ரீகள் பாகவத பாராயணம் செய்யலாமா?*

பதில் : தாராளமாகச் செய்யலாம்.

*கேள்வி : சரணாகதியைப் போன்று ஸுலபமான மார்க்கம் இல்லை என்று கூறுகின்றார்கள். ஆனால், என்னைக் கேட்டால் தியானம், ஜபம், விசாரம், யோகம் எல்லாம் கூட மிகவும் ஸுலபம், ஆனால் சரணாகதி மிகவும் கடினம் என்பேன். இது சரியா?*

பதில் : அப்படியில்லை. சரணாகதி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலே போதும், அதுவே, கொஞ்சம் கொஞ்சமாக பூரணமாக்கிவிடும். அதுவும், நம்முடைய சரணாகதியை தெய்வமோ, குருவோ பூரணமாக ஏற்றுக் கொண்டால், நம்முடைய ஸங்கல்பம் இல்லாமலேயே சிறிது சிறிதாக ஸுலபமாக நம்முடைய வாழ்க்கை ஈஸ்வர ஸம்மதமாக மாறிவிடும்.

*கேள்வி : வைதீக தர்மங்களை அனுஷ்டிப்பவர்களுக்கு நித்யபடி ஆறுவிதமான கர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளதே. பாகவத தர்மங்களை அனுஷ்டிப்பவர்களுக்கு நித்யபடியாக விதிக்கப்பட்ட கர்மாக்கள் யாவை?*

பதில் : ப்ராத: ஸ்மரணம், ப்ரபோதனம், உஞ்சவ்ருத்தி, பூஜை, நாமஸங்கீர்த்தனம், டோலோத்ஸவம் இவைகளே பாகவத தர்மங்களை அனுஷ்டிப்பவர்களின் ஷட்கர்மங்களாகும்.

*கேள்வி : ஞான வைராக்யங்கள் பூர்ணமாக ஸித்திக்க என்ன செய்ய வேண்டும்?*

பதில் ; தனிமையில் வாஸமும், பகவத்கீதா பாராயணமும், ஞான வைராக்யங்களை ஏற்படுத்தும்.

*கேள்வி : பக்தி மார்க்கத்தை அவலம்பித்துவரும் அனைவரும் வேதாந்தத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தாங்கள் அடிக்கடி கூறி வருவது ஏன்?*

பதில் : நாம் எந்த ஒரு கார்யம் செய்தாலும், அதை எதற்காக செய்கின்றோம். இதன் லக்ஷியம் என்ன என்பதை பூரணமாக தெரிந்து அனுஷ்டிக்க வேண்டும். அதுதான் அழகு. நாம கீர்த்தனம் செய்கின்றோம் அல்லது பாராயணம் செய்கின்றோம், கதா ஶ்ரவணம் செய்கின்றோம். இவையெல்லாம் எதற்காக. பணத்திற்காகவா அல்லது நாம் பாடுவதையும் சொல்வதையும் கேட்டு பிறர் நம்மை கொண்டாடுவதற்காகவா? அல்லது இவைகளில் உள்ள காவ்ய ரஸங்களையும் அலங்காரங்களையும் கண்டு மெச்சி ரஸிக்கவா? இவைகளின் தாத்பர்யம் நம் ஹ்ருதயத்தில் உள்ள ஆத்ம ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வதே என்பதில் நாம் குறியாக இருக்க வேண்டும். மேலும், வேதாந்தத்தை கை கொள்வதால் கிடைக்கும் ஶாந்தி வேறு எதனாலும் கிடைக்காது.

''எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். நமக்கு என்று உள்ளது நமக்கு நிச்சயம் கிடைக்கும். நமக்கு என்று இல்லாதது எம்முயற்சிக்கினும் கிடைக்காது'', போன்றவைகளினால் மனதில் ஏற்படும் ஶாந்தி வேறு எதனாலும் ஏற்படாது. ஆகவே, எந்தவிதமான ஸாதனைகளில் ஈடுபட்டாலும் இதன் பலன் நம் ஆத்ம ஸ்வரூபத்தை அடைவதே என்பதில் ஒரு ஸாதகன் கவனமாக இருக்க வேண்டும். ஒரு ஸாதகன் செய்யும் ஒவ்வொரு கார்யமும் அவனை இறைவனிடம் அழைத்துச் செல்வதாக இருக்க வேண்டும்.

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

# ஏகாதஶீ மாஹாத்ம்யம்

புண்ய திதியான ஏகாதஶீயன்று, செய்ய வேண்டிய கர்மாக்களாக பெரியோர்கள் (i) சுத்த உபவாஸம் (ii) ஸதா பகவத்கதா ஶ்ரவணம் என்ற இரண்டையும் கூறுவர். ஏகாதஶீயன்று அன்னம் உட்கொள்வது மஹா பாபம். இதுவே,

> *"ஏகாதஶ்யாம் து கர்தவ்யம் ஸர்வேஷாம் போஜனத்வயம் ।*
> *ஶுத்தாபவாஸ: ப்ரதம: ஸத்கதா ஶ்ரவணம் தத:"*

என்ற ஶ்லோகத்தினால் கூறப்படுகிறது. உபவாஸ: என்பதற்கு உப-ஸமீபே, வாஸ: - வஸித்தல் என்று அர்த்தம். இரவும், பகலும் பகவானுடைய த்யானத்திலேயே இருக்க வேண்டும்.

மூன்று நாட்கள் முதல், முப்பது நாட்கள் வரை, உபவாஸம் இருப்பதற்கு க்ருச்ரம் என்று பெயர். தினம் ஒவ்வொரு கவளமாக, அதாவது, முதல் நாள் ஒன்று, மறுநாள் இரண்டு என்று 16 நாட்கள் குறைத்துக் கொண்டு வந்து, பின் ஒவ்வொரு கவளமாக அதிகரித்துக் கொள்ளவேண்டும். இப்படி செய்ய முடியாதவர்கள் 10,000 காயத்ரீ ஜபம் செய்யலாம். இல்லையெனில், பூரக, கும்பக, ரேசக முறையில் 200 ப்ராணாயாமம் செய்யலாம்.

யாகங்கள், யோகங்கள் முதலியவைகளை செய்ய இயலாதவர்களுக்காகவே வ்ரதங்கள் ஏற்பட்டன. பரமாத்மாவை அடையவும், இந்த லோகத்திலும் மேல் லோகத்திலும் ஸுகத்தை அடைய சில நியமங்களுடன் உபவாஸமிருத்தலையே வ்ரதம் என்கின்றனர். உபவாஸத்துடன் கூடிய வ்ரதம், நம் உடலையும் மனதையும் ஶுத்தமாக்குகிறது. உபவாஸத்தை விட சிறந்த தபஸ் வேறில்லை. அதிக ஶ்ரமம் ஏற்பட்டால் தீர்த்தம், பால், பழம் இவைகளில் ஒன்றை புஜிக்கலாம். அதனால், வ்ரத பங்கம் ஏற்படாது.

ருக்மாங்கதன் என்னும் அரசன், தன் நாட்டில், ஹரிபக்தியை ஸ்தாபித்து, மிக நல்ல முறையில் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். அவனுக்கு "சந்த்ராவளி" என்ற ஸத்குண பரிபூரணையான பத்னியும், "தர்மாங்கதன்" என்னும் தர்மாத்மாவான பிள்ளையும் உண்டு. ஒருநாள், அந்த ராஜ்யத்திற்கு "நாரதர்" வந்தார். அவருக்கு, அர்க்ய பாத்யங்களைக் கொடுத்து உபசரித்தான் ருக்மாங்கதன். பிறகு, நாரதரிடம் 'மிகவும் சிறந்த தர்மம் எது?' என்று கேட்க, நாரதரும் 'ஏகாதஶீ வ்ரதமே' சிறந்த தர்மம் என்றுரைத்தார்.

அது முதற்கொண்டு, ருக்மாங்கதன், ஒவ்வொரு ஏகாதஸியிலும் வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தான். தான் மட்டுமல்லாமல், நாட்டில் உள்ள அனைவரும் ''ஏகாதஸீ வ்ரதம் இருக்க வேண்டும்'' என்று ஆணையிட்டான். இதனால், நாட்டில் ஸுபிக்ஷம் வளர்ந்தது. ஜனங்களனைவரும், ஸத்குணவான்களாகவும், ஆரோக்யம் உடையவர்களாகவும் இருந்தனர். அதனால், தர்மராஜனுக்கு வேலையே இல்லாமல் போய் விட்டது. நரகத்திற்கு ஒருவருமே வராததால் யமதர்மராஜா ப்ரஹ்ம ஸபையில் போய் உட்கார்ந்தார். தர்மராஜாவின் முகமாக ருக்மாங்கதனின் பெருமையைக் கேட்ட ப்ரஹ்மதேவர், ருக்மாங்கதனைப் பரிக்ஷிக்க எண்ணினார். ஒரு மோகினியை ஸ்ருஷ்டித்து, ''நீ சென்று ருக்மாங்கதனை மயக்குவாய்'' என்று அனுப்பினார்.

மோகினியும், ருக்மாங்கதன் காட்டில் வேட்டையாடி வரும் வழியில் நின்று, பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். வேட்டையாடி வந்த அரசன், அந்த அழகிய யுவதியைக் கண்டு, அவள் மீது மோஹம் கொண்டு, ''பெண்ணே! நீ யார் என்று கேட்டான். அதற்கு அவள், ''நான் ப்ரஹ்ம தேவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவள். என் பெயர் மோகினீ என்றாள். அரசன் ''நாம் இருவரும் கந்தர்வ விவாஹம் செய்து கொள்ளலாமா'' என்று கேட்டான். அந்த மோகினீ, ''நான் சொல்வதெல்லாம் கேட்பேன் என்று ஸத்யம் செய்து கொடுத்தால் உம்மை மணக்கிறேன்'' என்றாள். அரசனும் ஸம்மதிக்க, இருவரும் கந்தர்வ விவாஹம் செய்து கொண்டு, சிலநாள் காட்டிலேயே இருந்தனர். பின்பு, அரசன் அவளை அழைத்துக் கொண்டு நாட்டிற்கு வந்தான்.

ருக்மாங்கதனின் பத்னி சந்த்ராவளி, இருவரையும் அன்புடனேயே வரவேற்றாள். தர்மாங்கதனும் மோகினியை தன் சிற்றன்னையாக பாவித்து கௌரவித்து வந்தான். ருக்மாங்கதன், மோகினியிடமே மயங்கி இருந்தான். தர்மாங்கதன், ஒவ்வொரு ஏகாதஸீயையும், தன் பிதாவிற்கு நினைப்பூட்டி, அவனுடைய ஏகாதஸீ வ்ரதத்திற்கு பங்கம் வராதபடி பார்த்துக் கொண்டான்.

இப்படியிருக்கையில், ஒரு நாள் பறை கொட்டுபவர்கள், ''இன்று தசமி; நாளை ஏகாதஸீ வ்ரதமிருப்பவர்கள், இன்று ஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்'' என்று பறை கூற, மன்னன் கட்டிலிலிருந்து உடனே எழுந்து கொண்டு, மோகினியையும் எழுப்பினான். அதற்கு அவள், ''இத்தனை நாள் நீங்கள் அனுஷ்டித்த ஏகாதஸீ புண்யமே போதும். மேலும், நாட்டு மக்கள் அனைவரும் வ்ரதமிருப்பதாலேயே நாட்டிற்கு க்ஷேமம் வந்துவிடும். இன்று, நீங்கள் என்னுடனேயே இருந்து விடுங்கள்'' என்று கூறினாள்.

அதை மறுத்த ருக்மாங்கதன், ''அரசன் தர்மத்தை அனுஷ்டித்து மக்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும். நீ என்னுடைய பத்னி; ஆகையால், நான் அனுஷ்டிக்கும் தர்மத்தில் நீயும் பங்கு கொள்ள வேண்டும்'' என்று கூறினான். அதற்கு மோகினீ, ''எனக்கு இந்த புண்ணியங்களிலெல்லாம் ஆசையில்லை. எப்பொழுதும் ஸுகமாக இருக்க வேண்டும். எனவே, என்னை விட்டு நீங்களும் பிரியாதீர்கள்'' என்று கூறினாள்.

அதற்கு அரசன், ''நான் சந்த்ராவளியை விட நேர்ந்தாலும் விடுவேன். என் புத்ரன், தர்மாங்கதனை விட்டாலும் விடுவேன். உன்னை விட நேர்ந்தாலும் விடுவேன். ஆனால், ஏகாதஶீ வ்ரதத்தை அனுஷ்டிப்பதை ஒருகாலும் விடமாட்டேன்'' என்று கூறி கிளம்பவே, மோகினீ அரசனிடம், ''நான் சொல்வதைக் கேட்பேன் என்று ஸத்யம் செய்தீர்கள், இப்பொழுது மீறுகிறீர்களே!'' என்று கேட்க, அரசன், ''ஏகாதஶீ வ்ரதமனுஷ்டிப்பதை விடுவதைத் தவிர வேறு என்ன வேண்டினாலும் தருகிறேன்'' என்று கூற, ''அப்படியென்றால் தங்கள் மகன் தர்மாங்கதனின் தலையை வெட்டித் தாருங்கள்'' என்றாள்.

ருக்மாங்கதன் அவளைக் கடுமையாகப் பேசி, ஏகாதஶியையும் விடேன், என் மகனையும் கொல்லமாட்டேன், நீ இப்பொழுதே நாட்டை விட்டு வெளியேறு'' என்றான். ஆனால் மோகினீ, ''ஸத்யத்தை மீறுகிற உம்மை நாயும் மதிக்காது. நரகத்திலும் உமக்கு இடம் கிடைக்காது'' என்று பலவிதமாக ஏசினாள். பிறகு ருக்மாங்கதன் ஸத்யத்திற்குக் கட்டுப்பட்டு அவள் மனம் மாற அவள் காலில் விழுந்து பலவாறு மன்றாடினான்.

இதற்குள், அரசனுடைய அழுகைக் குரலைக் கேட்டு சந்த்ராவளி, தர்மாங்கதன் முதலியோர் அங்கு வந்தனர். சந்த்ராவளி, அனைத்தையும் கேட்டு தைர்யமுடையவளாக, ''மன்னா! உம்மை பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நீர் ஏகாதஶீ விரதத்தை விடவேண்டாம். இதோ உம் மகனுடைய தலையை வெட்டி, இவளுடைய கோரிக்கையை நிறைவேற்றுங்கள்'', என்று கூறினாள். தர்மாங்கதனும், பிதாவிற்காகவும், ஏகாதஶீ வ்ரதத்திற்காகவும், என் உயிரை நிஶ்சயமாய் விடுவேன் என்று கூறி, தந்தையின் முன் சிரம் தாழ்த்தினான். அதைக்கண்டு ருக்மாங்கதன் மோஹினியைப் பார்த்து ''அடிப்பாவீ! அவர்களைக் கண்டும் உன் மனம் இளகவில்லையா'' என்று கூறினான். ஆனால் மோகினீ ''ஏகாதஶீயை விடு, அல்லது மகனின் தலையைக் கொடு'' என்றாள் பிடிவாதமாக.

உடனே ருக்மாங்கதன், ''அடி சண்டாளி! இனி உன்னை என்றும் தொடவே மாட்டேன். இது ஸத்யம்'' என்று கூறி வாளை எடுத்து

தர்மாங்கதனைப் பார்த்து, ''ஹே! தர்மாங்கத! ஸ்ரீமந் நாராயணனை த்யானம் செய்து கொள். சாகும் தருணத்தில், அவனை ஸ்மரித்தால் அவனையே அடையலாம்'' என்று கூறி வாளை வீசினான். ஆனால், அதேவாள் தர்மாங்கதனுடைய கழுத்தில் மாலையாக போய் விழுந்தது. அந்த க்ஷணமே, ''ஶங்க, சக்ர, கதாதரனாக பகவான் அங்கு ப்ரத்யக்ஷமானான். அனைவரும், பக்தியுடன் ஹரியை பூஜித்தனர். பகவான், ருக்மாங்கதனிடம் ''உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்'' என்று கூற ருக்மாங்கதன், ''ஒவ்வொரு பிறவியிலும் உன்னிடம் சிறந்த பக்தியுடையவனாக இருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். பகவான் அவ்வாறே அனுக்கிரஹித்து மறைந்தான்.

பிறகு அரசனால் கைவிடப்பட்ட மோகினீ, ப்ரஹ்மாவிடம் சென்று, ''எனக்கு என்ன கதி'' என்று வேண்ட, ப்ரஹ்மதேவர் அவளைப் பார்த்து ''தசமி கலந்த ஏகாதஶியில் யார் வ்ரதமனுஷ்டிக்கிறார்களோ அந்த பலன் உன்னைச் சேரும்'' என்று அனுக்ரஹித்தார். இப்படியாக ஏகாதஶீ மாஹாத்ம்யம் கூறப்படுகிறது. ■

14-ம் பக்க தொடர்ச்சி

*கேள்வி : எங்கேயோ வான மண்டலத்தில் உள்ள க்ரஹங்கள் நம்மை பாதிக்கும் என்கிறார்களே! எப்படி?*

பதில் : நம்முடைய மனதிற்கும் இந்த ப்ரபஞ்சத்திற்கும் ஒரு தொடர்பு இருந்தே ஆக வேண்டும். இந்த ப்ரபஞ்சத்தில் ஏற்படும் மாற்றங்கள் நம்முடைய மனதில் பாதிப்புகளை ஏற்படுத்துவதில் அதிஶயம் ஒன்றும் இல்லை. ஒரு சிறு உதாரணம் மூலமாக விளக்க வேண்டும் என்றால், நம்முடைய தோட்டத்தில் புதியதாக மலர்ந்துள்ள ஒரு புஷ்பத்தை பார்த்தவுடன் நம்முடைய மனதில் ஸந்தோஷம் தானாக ஏற்படுகின்றது. நம்முடைய அக்கம்பக்கத்தில் நடக்கும் ஒரு துக்க ஸம்பவம் நம்முடைய மனதை மிகவும் பாதிக்கின்றது. இதற்கு, அந்த செயல்கள் மட்டும் காரணம் அல்ல. ப்ரபஞ்சத்தில் நடக்கும் ஒவ்வொரு மாற்றமும் நம்மை பாதிப்பதே காரணமாகும். ஆகவே, க்ரஹங்களின் ஸஞ்சாரங்களினால் நமக்கு பாதிப்பு ஏற்படும் என்பதில் எந்த விதமான வியப்பும் இல்லை.

*கேள்வி : குருவிடம் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?*

பதில் : உத்தம குருவானவர், எப்பொழுதும், பகவத் விஷயங்களான கைங்கரியங்களிலோ தியானத்திலேயோ ஈடுபட்டிருப்பவர். ஆகையால், நாம், நம்மால் முடிந்த வரைக்கும் அதற்கு எந்த விதமான தொந்தரவும் ஏற்படுத்தாமல் அனுகூலமாக நடந்து கொள்வதே மிகவும் அவஶ்யமான கைங்கர்யமாகும்.

# வேத கதைகள் - 10

- தர்மக்ஞர், வான்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்திரிகள்

## வாஜபேயம்

ரிஷிகள், தங்களுடைய தவ வலிமையால் மந்திரங்களை கண்டு பிடித்தனர். மந்திரங்களைக் கண்டு பிடித்ததாலேயே இவர்களுக்கு ரிஷிகள் என்று பெயர் ஏற்பட்டது. இவ்விதம், யாகங்களையும் கண்டுபிடித்தனர். ஆகாயத்தில் உள்ள ஶப்த அலைகளை ஏரியல் மூலமாக வாங்கி ரேடியோ பெட்டிகள் எவ்விதம் ஒலிகளை எழும்படி செய்கிறதோ, அதைப் போல ரிஷிகள், ஆகாயத்தில் உள்ள வேத ஒலிகளை தங்கள் ஸூக்ஷ்ம சக்தியினால் காதால் கேட்டு, ஸூக்ஷ்ம த்ருஷ்டியினால் பார்த்து நமக்கு அளித்திருக்கின்றனர். ஆதலால், இவர்களுடைய காதிற்கு திவ்ய ஶ்ரோத்ரம் என்று பெயர். இவ்விதம் அக்னிஷ்டோமம், உக்த்யம், அதிராத்ரம் முதலிய யாகங்களை தேவர்கள் வேறு வேறு காலங்களில் தனித்தனியாக கண்டு பிடித்தனர். தேவர்களுக்கும் மந்திரங்களையும், யாகங்களையும் கண்டு பிடிக்கும் ஶக்தி இருக்கிறது. எந்தெந்த தேவர்கள் எந்தெந்த யாகத்தை முதலில் கண்டு பிடித்தார்களோ, அந்தந்த யாகத்தை அவரவர்களே அனுஷ்டித்தனர்.

வாஜபேயம் என்ற யாகத்தை தேவர்கள் யாவரும் ஒரே ஸமயத்தில் கண்டுபிடித்தனர். இந்த யாகத்தை முதலில் அனுஷ்டிப்பதில் தேவர்களுக்குள் போட்டி ஏற்பட்டது. ஒவ்வொருவரும் "நான் தான் முதலில் செய்வேன்" என்றனர். பிறகு தேவர்கள், 'நாம் ஒரு ஓட்டப் பந்தயம் நடத்துவோம். அதில் யார் முதலில் வருகிறார்களோ அவர்களே முதலில் வாஜபேயத்தை அனுஷ்டிக்கலாம் என்று ஒரு உடன்படிக்கைக்கு வந்தனர். பிறகு ஓட்டப்பந்தயம் நடத்தினர். இதில் குருவான ப்ரஹஸ்பதி வெற்றி பெற்றார். உடன்படிக்கையின்படி வாஜபேயத்தை அவர் முதலில் அனுஷ்டித்தார். இதை அனுஷ்டித்ததால் ஸ்வராஜ்யம் என்ற உயர்ந்த பயன் அவருக்குக் கிடைத்தது. பிறகு இந்திரன், அவரை அணுகி தனக்கு வாஜபேயத்தை செய்து வைக்குமாறு வேண்டினான். அவரும் தன் சிஷ்யனான இந்திரனுக்கு வாஜபேயத்தை நடத்தி வைத்தார்.

வாஜபேயத்தைச் செய்ததால், இந்திரன் தேவர்களுக்குள் முதன்மையைப் பெற்றான். ஸ்வராஜ்யம் என்ற பயனும் அவனுக்குக் கிட்டியது.

தேவர்களுக்கு தலைமை பதவியையும் இந்திரன் அடைந்தான். இந்த யாகமானது ப்ராஹ்மணன், க்ஷத்ரியன் இருவராலும் அனுஷ்டிக்கக் கூடியது. இந்த வாஜபேய யாகமானது யாகங்களுக்குள் உயர்ந்த யாகமாகும். இதைச் செய்தவர்களுக்கு அந்த காலத்தில் அரசர்கள் வெண்குடை பிடித்து மரியாதை செய்தனர். தந்தையின் சொல்லைக் கேட்டு ராமன் காட்டிற்குச் செல்லும் பொழுது, வாஜபேயம் செய்த மஹரிஷிகள் ராமனைப் பின் தொடர்ந்தனர். கைகேயியின் கொடுமையினால் ராமனுக்கு வெண்குடை சாமரங்கள் இல்லாமல் போயிற்று. 'ஓ ராமா, நாங்கள் வாஜபேய யாகம் செய்து வெண்குடைகளைப் பெற்றிருக்கிறோம். அந்தக் குடைகளால் உனக்கு நாங்கள் நிழல் தருகின்றோம், என்று மஹரிஷிகள் வேண்டியதாக ஸ்ரீ வால்மீகி அயோத்யா காண்டத்தில் கூறுகிறார்.

வாஜபேய யாகம் செய்தவர்கள் பரம்பரையில் பிறந்தவர்கள் கூட தன்னை வாஜபேயி என்று கூறிக் கொள்கின்றனர். தற்சமயம், வாஜபேய யாகம் செய்தவர்கள் பலர் இருக்கின்றனர். வாஜபேய யாகம் செய்தவர் மிகவும் உயர்ந்தவர் என்று வேதம் கூறுகின்றது.

இந்த வ்ருத்தாந்தமானது, ஸ்ரீ க்ருஷ்ண யஜுர்வேதம், முதல் அஷ்டகம், மூன்றாவது ப்ரபாகத்தில், இரண்டாம் அனுவாகத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ■

---

| | | |
|---|---|---|
| முன் அட்டைப்படம் | : | ஸமீபத்தில், பெங்களூரில் நடந்த ப்ரஸ்தானத்ரய பாஷ்ய ஸதஸில், நம் ஸ்வாமிகள். |
| பின் அட்டைப்படம் | : | அதே வைபவத்தில், கலந்து கொண்ட வேத வித்வான்கள். |

# நாரத பக்தி ஸூத்ரம் - 2

- ப்ரஹ்மஶ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

*அதாதோ* ***பக்திம்*** *வ்யாக்யாஸ்யாம:*

அத - பிறகு, அத: - ஆகையினால், **பக்திம்** - பக்தியை, வ்யாக்யாஸ்யாம: - விவரிப்போம். நாரத பக்தி ஸூத்ரமாகிய நூலில் முதல் ஸூத்ரமாக இது அமைந்துள்ளது.

*அல்பாக்ஷரம் அஸந்திக்தம் ஸாரவத்விஶ்வதோமுகம் ।*
*அஸ்தோபம் அனவத்யஞ்ச ஸூத்ரம் ஸூத்ரவிதோ விது: ॥*

''விரிவான விஷயங்களைச் சுருக்கமாய், ஸாரமாய், குற்றமில்லாமல், சந்தேஹங்களுக்கு இடமில்லாமல் கூறுவதே ஸூத்ரம் என்றழைக்கப்படும்'' என்று ஸூத்ரத்திற்கான லக்ஷணத்தை பெரியோர்கள் கூறுகின்றனர். அதன்படி நாரதர், பக்தியின் விஷய்ங்களை ஸூத்ரங்களாய் இந்நூலில் வெளியிடுகிறார். *அத* (பிறகு) என்ற ஸப்தத்தையே முதலாவதாக வைத்து பக்தி ஸூத்ரத்தை தொடங்குகிறார்.

எல்லா ஸூத்ரகாரர்களுமே அநேகமாய் தன் நூல் தொடங்கும் பொழுது *அத* - என்ற வார்த்தையையே முதலாவதாக வைத்து நூலைத் தொடங்குகின்றனர். ப்ரும்ம ஸ்வரூபத்தை உணர்த்தும் வேதாந்த கருத்துக்களை விளக்க வந்த வேதவ்யாஸர் ப்ரும்ம ஸூத்ரங்களை தொடங்கும் போது '*'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா*'' என்றே தொடங்குகிறார். வேதத்தில் சொல்லப்பட்ட தர்மங்களை விளக்க வந்த ஜைமினி முனிவர், பூர்வ (தர்ம) மீமாம்ஸா ஸூத்ரங்களை தொடங்கும் போது *'அதாதோ தர்மஜிஜ்ஞாஸா'* என்றே தொடங்குகிறார். அவ்வாறே யோக ஸூத்ரங்களை தொடங்கும் பதஞ்ஜலி முனிவர், *'அத யோகானுஶாஸனம்'* என்றும், ஸ்மார்த்த தர்மங்களைச் சொல்ல வந்த ஆபஸ்தம்பர், *'அதாத: ஸாமயாசாரிகான் தர்மான் வ்யாக்யாஸ்யாம:'* என்னும் தொடங்குகின்றனர். அவ்வாறே ஶிக்ஷை முதலிய ஶாஸ்திரங்களின் தொடக்கத்திலும் பார்க்கிறோம். இந்த '*அத* - பிறகு என்றும் வார்த்தையை பார்க்கும்பொழுது எதற்குப்பிறகு என்கிற வினா இயற்கையாய் எழும்புகிறது.

ஒவ்வொரு நூலில் காட்டப்படும் பாதையும், அந்தந்த பாதைக்கு இன்றியமையாத தகுதிகளைக் கொண்டவனைக் குறித்தே ப்ரவ்ருத்திக்கின்றன. அந்த குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றவனே அந்த பாதையில் செல்ல முடியும். வ்யாஸ மாமுனிவர் காட்டும் ப்ரும்ம ஞானமானது, அடிப்படைத் தகுதிகளாக விவேகம், வைராக்யம், ஸமம், தமம் முதலிய குணங்கள், முமுக்ஷுத்வம் இவற்றை எதிர்பார்க்கிறது. இவைகளைப் பெற்றவனே ஞானமாகிய பாதையில் அடி எடுத்து வைக்க முடியும். கர்ம யோகமோ கர்மாவிற்குத் தேவையான மந்த்ரம் முதலான பலவிதமான அங்கங்களை எதிர்பார்க்கிறது. அவைகளை அறிந்தவன்தான் கர்ம யோகமாகிய பாதையில் அடி எடுத்து வைக்க முடியும்.

அதே போல், த்யான யோகமாகிய பாதைக்கு யமம் முதலான அங்கங்கள் தேவைப்படுகின்றன. ஸ்மார்த்த தர்மங்களோ வர்ணாஶ்ரம பிரிவிற்கு தக்கபடி அமைகின்றன. இவ்வாறு எந்தந்த பாதைக்கு எவையவை இன்றியமையாதவைகளோ அவற்றை ஸம்பாதித்துக் கொண்டவனே அந்தந்த பாதைக்கு அதிகாரி என்பதால் '*அத*' - பிறகு' என்பதற்கு, அந்தந்த தகுதியை பெற்ற பிறகு எனக்குறிப்பிட்டு, '*அத*' என்ற சொல், அந்தந்த நூல் விவரிக்கும் பாதையில் செல்லத் தகுந்த அதிகாரியை கூறுவதாய் எல்லா பெரியோர்களும் வ்யாக்யானம் செய்கின்றனர்.

பக்தி ஸூத்ரகாரரான நாரதரும் தனது நூலைத் தொடங்கும் பொழுது '*அத*' என்ற வார்த்தையுடனேயே தொடங்குகிறார். இங்கு எந்த அதிகாரியை குறிப்பிடுகிறார்? குறிப்பிட்ட தகுதி படைத்தவன்தான் பக்திக்கு அதிகாரி என்பது இல்லை. பிறவி எடுத்த அனைவருக்கும் பக்தியில் அதிகாரம் உண்டு. தனிப்பட்ட வேறு தகுதி தேவையில்லை.

*ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்ரா நீசாஸ்ததா ஸ்த்ரிய: ।*
*பஶவ: பக்ஷிணஶ்சாபி விஷ்ணுதர்மேஶதி காரிண: ॥* என்றும்

*ஸ்த்ரிய: ஶூத்ராஸ்ததா வைஶ்யஶ்சண்டாளா: புல்கஸா அபி ।*
*ஸர்வே ச பக்தியோகஸ்ய கம்ஸாரேரதிகாரிண: ॥* என்றும்

எனது குருநாதர், ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள், வைஷ்ணவ ஸம்ஹிதையில் குறிப்பிடுகின்றார். ப்ராஹ்மணனும் பக்திக்கு அதிகாரி. புலையனும் அதிகாரி. ஆணும் அதிகாரி. பெண்ணும் அதிகாரி. ஏழையும் அதிகாரி. கோடீஸ்வரனும் அதிகாரி. படித்தவனும் அதிகாரி. பாமரனும் அதிகாரி.

பக்தி மார்க்கம் அனைவருக்கும் திறந்த வழியாக உள்ளது. ஏனைய பாதைகள் குறிப்பிட்ட தகுதி படைத்தவனுக்கே உரியது எனும் நிலையில், பக்தி ஒன்றே அனைவருக்கும் தகுந்த பாதையாக உள்ளது. செல்வதற்கு ஸுலபமான பாதையாகவும் உள்ளது. பாதையில் செல்பவர்கள் நழுவி விடாமல் அவர்களை கொண்டு போய் சேர்க்கும் பாதை. பகவானை எளிதாய் ப்ரீதி செய்யும் பாதை. நம் எதிரிலேயே பகவானை கொண்டு நிறுத்தும் பாதை. எல்லா மங்களங்களையும் அளிக்கவல்ல மங்களகரமான பாதை. இவைகள் அனைத்தையும் ஆராய்ந்த பிறகு, பக்தியை விவரிக்கிறோம் என்கிறார் நாரதர். எனவே *'அத'* என்பதற்கு 'ஸகல ஶாஸ்திரங்களை ஆராய்ந்த பிறகு, பக்தியின் பெளலப்யத்தையும், பக்தி ஒன்றுக்கே பகவான் ஸுலபன் என்பதையும் ஆராய்ந்த பிறகு' என்று பொருள் கொள்ளலாம்.

அதன் பின் *''அத:* - ஆகையினால்'' என்கிறார். ஆகையினால் என்பதற்கு, 'துன்பமில்லாததும், அழிவற்றதும், இன்பமயமானதுமான நிலையைத் தருவதால்' என்று பொருள் கொள்ளலாம்.

உலகில் மனிதனின் ஒவ்வொரு ப்ருவ்ருத்தியும் இன்பத்தை நோக்கியே உள்ளது. ஆனால், இன்பம் தான் கிடைப்பதில்லை. ஶரீரத்தாலோ புலன்களாலோ நுகரக் கூடிய வஸ்துக்கள் ஆரம்பத்தில் ஸுகம் தருபவை போல் இருந்தாலும் முடிவில் துன்பத்தையே தரக்கூடியவைகளாக உள்ளன. இன்பம் கொடுப்பது போன்ற தோற்றம் தானே ஒழிய உண்மையில் அவைகளால் இன்பம் கிடையாது. ஒரு துன்பம் போனால் மற்றொரு துன்பம் தயாராக காத்து நிற்கின்றது. துன்பம் நிறைந்ததாகவே வாழ்க்கை இருக்கின்றது.

தாயின் கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே ஒரு ஜீவன் அளவு கடந்த துன்பத்திற்கு ஆளாகிறான். தாயின் கர்ப்பத்திலிருந்து இவ்வுலகில் வெளிப்படும் பொழுதும் துயரம். பலவித வ்யாதிகளுக்கு விளை நிலமாய் இருக்கும் சரீரத்தாலும், காமம், கோபம், பேராசை, பொறாமை முதலிய மனோ வ்யாதிகளாலும் துயரம். ஏழ்மையால் துயரம். அளவுக்கு அதிகமாய் பணம் இருந்தால், அதனாலும் துயரம். விருப்பத்திற்கு விபரீதமாய் காரியம் நடந்தால் துயரம். மூப்பினால் துக்கம், மரணத்தினால் துக்கம். எனவே தான் பகவான் பகவத் கீதையில்

*து:காலயம் அஶாஸ்வதம் ॥*

என்கிறார். துயரத்துக்கெல்லாம் இருப்பிடமாக இருக்கிறது இந்த சரீரம்.

*ஜரயா வ்யாதிபிஶ்சாத தாரித்ர்யேண பயேநச ।*
*விபதா மரணேநாபி ஸர்வம் து:க மயம் ஜகத் ॥*

என்று ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் ஶங்கர சரித்ரத்தில் எடுத்துச் சொல்கிறார். அதோடு மட்டும் இல்லாமல் நிலையற்றதாயும் இந்த ஶரீரம் உள்ளது. இன்று உள்ளவர்கள் நாளை இருப்பதில்லை. இன்று உள்ள பொருள் நாளை அழிந்து விடுகிறது. நுகரக் கூடிய பொருள்களும் நுகருகின்ற சரீரமும் நிலையானது இல்லை. எனவே தான் ***'து:காலயம் அஶாஸ்வதம்'*** என்கிறார் கீதாசார்யன். எனவே, 'அழிவற்ற தன்மையை ஆசைப்பட்டால், பேரின்பத்தை நுகர விரும்பினால், என்னிடம் பக்தி செய்' என்கிறார் பகவான். ***"அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்"*** எனவே, அழியக் கூடிய சரீரத்தால் செய்யக் கூடிய உருப்படியான கார்யம் பகவத் பக்தி ஒன்றே. பகவானிடம் ஏற்படும் பக்தி ஒன்றே மனிதப்பிறவியின் உண்மையான பயனாக ஆகிறது.

*துர்லபம் மானுஷம் ஜன்ம லப்த்வா பாக்யேன யோ நர: ।*
*ந கரோதி ஹரௌ பக்திம் ஸமூடோ வ்யர்தஜீவித: ॥*

என்று பக்தி பாடத்திலும்

*அஶாஶ்வதமிமம் தேஹம் ப்ராப்ய யோ நரஜன்மனி ।*
*ந கரோதீஶ்வரே பக்திம் தஸ்ய ஜன்ம வ்ருதா வ்ருதா ॥*

என்று வைஷ்ணவ ஸம்ஹிதையிலும் ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் உணர்த்துகின்றார்.

லக்ஷக்கணக்கான ஜீவராசிகள் நிறைந்த இந்த ப்ரபஞ்சத்தில், மனிதப் பிறவி ஸுலபமாய் கிடைப்பது இல்லை. சில ஜீவன்களுக்கு ஏதோ பாக்ய விசேஷத்தால் மனிதப் பிறவி கிடைத்துள்ளது. அதை வீணாக்கி விடலாகாது. மனிதப் பிறவியில் தான் ஜீவன் அடைய வேண்டிய உத்தமமான லாபத்தை அடைய முடியும். அதுவும், ஜீவன் சரீரத்தை விட்டு பிரிவதற்குள் அந்த லக்ஷயத்தை அடைய வேண்டும். எவ்வளவு காலம் சரீரம் இருக்கும் என்று நிச்சயமாய் சொல்ல முடியாது. வருடக் கணக்கிலும் இருக்கலாம். நாள் கணக்கிலும் முடியலாம். ஒரு க்ஷணத்தில் கூட ஆயுள் முடிந்துவிடும். எனவே, எதை அடைவதால் மனிதப் பிறவி பயனுடையதாய் ஆகுமோ அதற்காகப் பாடுபட வேண்டும்.

*வர்ஷார்தமஷ்டௌ ப்ரயதேதமாஸாந்*
*நிஶார்தமர்தம் திவஸா யதேத ।*
*வார்தக்யஹேதோர்வயஸா நவேந*
*பரத்ர ஹேதோரிஹ ஜன்மநா ச ॥*

என்று ஸ்ரீ பெரியாழ்வார் வைபவத்தில் வர்ணிக்கப்படுகின்றது. ''மழை காலத்துக்கு வேண்டியதை கோடைகாலத்திலேயே சேர்த்துக் கொள்வது போல், இருள் சமயத்தில் அவஶ்யமானதை வெளிச்சம் இருக்கும் பொழுதே தயார் செய்து கொள்வதுபோல், வயதான காலத்துக்கு தேவையானதை இளமைப் பருவத்திலேயே ஸேமித்து வைப்பதுபோல், பரலோகத்துக்கு வேண்டியதை இப்பிறவிலேயே தேடிக்கொள்ள வேண்டும்'' என்பது பொருள்.

எதுவும் ஸுலபமாய் கிடைத்து விட்டால் அதன் அருமை தெரிவது இல்லை. பலவிதமான துன்பங்களும் தாபங்களும் நிறைந்த ஸம்ஸார ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்காக பகவான் கொடுத்த ஓடமே இந்த மனிதப் பிறவி. விவேகம் ஒன்றே மனிதப் பிறவியின் சிறப்பு. ஏனைய ஜந்துக்களிடம் இந்த விவேகம் கிடையாது. நித்ய அநித்ய வஸ்துக்களை ஆராய்ந்து உணர்வதே விவேகத்தின் காரியம். பகவான் ஒருவனே நித்ய வஸ்து. மற்றவை அனைத்தும் அநித்ய வஸ்துக்களே. அநித்ய வஸ்துக்களை பற்றுவதால் என்றும் துன்பம் தான். எனவே, சரீரத்திலோ, சரீர ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களிலோ பற்று வைக்காமல் பகவானிடமே பற்று கொள்வதுதான் மனிதப் பிறவியின் பயன். பகவானிடம் வைக்கும் பற்று தானே பக்தி! எனவே, பகவானிடம் பக்தி செய்வதாலேயே, ஜன்மா ஸபலமாக ஆகிறது. ஆகவே *'அத:'* - ஆகையினால் என்பதற்கு 'நித்யமான பேரின்ப நிலையை பக்தி ஒன்று தான் கொடுக்கும் என்பதால்; என்றும், 'பகவானிடம் பக்தி செய்வதே மனிதப் பிறவியின் பயன் என்பதால்' என்றும் பொருள் கொள்ளலாம்.

***'பக்திம் வ்யாக்யாஸ்யாம:'*** 'பக்தியை விளக்குவோம்' என்கிறார். பக்தனின் ஸ்வபாவத்தையும், குணங்களையும் ஒட்டி ஸாதன பக்தி, கௌண பக்தி என்றும்; தாமஸ பக்தி, ராஜஸ பக்தி, ஸாத்விக பக்தி என்றும்; பாவபக்தி, ப்ரேம பக்தி, பராபக்தி, அனன்ய பக்தி என்றும் பலவிதமாக சொல்லப் படுவதால், பக்தியின் நிலைகளை விவரித்துச் சொல்ல விரும்பும் நாரதர், 'பக்தியை விளக்குவோம்' என்று தொடங்குகிறார். ■



# பாலகர்களுக்கு ஒரு கதை - 5

அக்பர் அரசாட்சி செய்து வரும் காலத்தில், அவருடைய ஸபையில் பீர்பால் என்ற மந்திரி இருந்து வந்தார். அவர் மிகவும் கூர்மையான மதியுள்ளவர். அக்பர், இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர். பீர்பாலோ, ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர். அக்பர், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக மிகவும் பாடுபட்டவர். புதியதாக 'தீன் இலாஹி' என்ற ஒரு மதத்தையே ஏற்படுத்தினார். அவ்வப்பொழுது, அவர் பீர்பாலிடம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் கூர்மையான மதியுடைய பீர்பால், மிகவும் அழகான பதிலுரைப்பார். அவருடைய பதிலைக் கேட்டு சான்றோர்கள் உட்பட அனைவரும் வியந்து பாராட்டினர்.

இப்படியிருக்கையில், ஒரு சமயம், அக்பர் பீர்பாலிடம், 'இந்து மதத்தில் இறைவனே ராவணன், கம்சன் போன்ற துஷ்டர்களை அழிப்பதற்காகவும் தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவும் பத்து அவதாரங்கள் எடுத்ததாக கூறப்படுகிறதே!' என்று கேட்டார். 'உங்களது இறைவன் ஸர்வ ஶக்தனாக இருக்கும் பக்ஷத்தில் தன்னுடைய ஸ்தானத்தை விட்டு பூமியில் இறங்க வேண்டிய அவஶ்யம் என்ன? இப்பூவுலகத்தில் உள்ள யாரோ ஒருவருக்கு அப்பேர்ப்பட்ட சக்தியை அளித்து உங்கள் இறைவன் மேற்படி காரியத்தை ஸாதித்திருக்கலாம் அல்லவா? அவனே பூமியில் வரவேண்டிய அவஶ்யம் என்ன?'' என்று வினவினார். பீர்பால், இதற்கு பதில் அளிக்க தனக்கு தக்க அவகாசம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மன்னரும் அதற்கு ஸம்மதித்தார்.

சில நாட்கள் கழித்து, ப்ரதி வருடமும் யமுனையில் நடக்கும் படகு போட்டி நடக்க இருந்தது. அதில் கலந்து கொள்ள, தன்னுடன் அக்பர் பீர்பாலையும் அழைத்திருந்தார். படகு போட்டி ஆரம்பிக்க வேண்டிய காலம் ஆகியும் பீர்பால் வராததைக் கண்ட அக்பருக்கு சிறிது கோபம் ஏற்பட்டது.

பீர்பால், அக்பரின் கைக்குழந்தையை அழைத்துக் கொண்டு சிறிது தாமதமாக வந்து சேர்ந்தார். அக்பர், தாமதத்திற்கான காரணத்தை வினவ, பீர்பாலும், 'நான் கிளம்புகையில் மன்னரின் குழந்தை கூட வருவதாக அடம் பிடித்ததே தாமதத்திற்கு காரணம்' என்று பதில் கூறி, தாமதத்திற்காக தன் வருத்தத்தையும் தெரிவித்தார். படகு போட்டியும் ஆரம்பித்தது.

அக்பர், அக்பரின் குழந்தையை கையில் ஏந்திய பீர்பால், மற்றும் சிப்பாய்கள் உட்பட அனைவரும் அமர்ந்திருந்த படகும் யமுனையில் செல்ல ஆரம்பித்தது. சிறிது தூரம் சென்ற பின், யாரும் எதிர்பார்க்காத வகையில், பீர்பால் தன் கையிலிருந்த குழந்தையை யமுனையில் போட்டு விட்டார். இதைக் கண்ட அக்பர் அக்கணமே யமுனையில் குதித்து குழந்தையை எடுக்கையில் அது தன் குழந்தையல்ல என்பதையும், அது தன் குழந்தையைப் போல் மெழுகினால் செய்யப்பட்ட பொம்மை என்பதையும் அறிந்து மிகவும் சீற்றம் அடைந்து, பீர்பாலிடம் கடிந்து கொண்டார்.

பீர்பாலோ தன்னை மன்னித்தருள கோரி, அன்று அக்பர் கேட்ட கேள்விக்கு பதில் தருவதற்காகவே தான் இப்படி நடந்து கொண்டதாக கூறினார். அக்பரும், பீர்பால் சொல்வது தனக்கு புரியவில்லை; அதனால் சற்று விளக்கமாக கூறும்படி கேட்டார்.

பீர்பால், அக்பரிடம், ''உங்களுடைய குழந்தையை நான் யமுனையில் போட்டவுடன் தாங்கள், தங்கள் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு தங்களுடன் வரும் என்னையோ, ராஜ ஸேவகர்களையோ, நூற்றுக்கணக்கான சிப்பாய்களில் ஒருவரையோ குழந்தையை எடுக்க பணிக்காமல் தாங்களே யமுனையில் குதித்து குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய அவஶ்யம் என்ன? அதற்கு காரணம், தங்களுக்கு, தங்கள் குழந்தை மேல் இருக்கும் வாத்ஸல்யம் அல்லவா? அது போலவே, பகவான் ஹரியும் தன்னுடைய குழந்தைகளை காப்பதற்காக வாத்ஸல்யத்தினால் பூமியில் மீண்டும் மீண்டும் அவதரிக்கின்றான்'' என்று கூறினார். அதைக் கேட்ட அக்பர் உட்பட அனைவரும் மிகவும் ஸந்தோஷித்தனர்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

---

*மிஷன் சார்பில் 'சாந்தீபனி குருகுலம்'' என்ற டிரஸ்டின் கீழ் சாம வேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும், சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன.*

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 31

*கெஞ்சியும் வஞ்சியாய் கொஞ்சமும் இரங்கிலை*
*அஞ்சல் என்றே அருள் அருணாசலா* 21

முன்பு ஒரு பாடலில், *'கிரியுருவாகிய க்ருபை கடலே க்ருபை கூர்ந்தருளுவாய் அருணாசலா'* என்று பார்த்தோம். ஆனால், இந்தப் பாடலிலோ, ஸாமான்யர்கள் கூறுவதுபோல் 'இவ்வளவு கெஞ்சியும் பிடிவாதமாக எனக்கு அருள் செய்யாமல் இருக்கின்றாயே, அஞ்சேல் என்று அருளக்கூடாதா?' என்று ப்ரார்த்திக்கிறார். நாம் இறைவனிடம் எப்படி ப்ரார்த்திக்க வேண்டும் என்று அழகாக சொல்லித் தருகின்றார். அருணாசல மஹாத்மியத்தில், இந்த க்ஷேத்ரத்தின் பெருமையும் அருணாசல மலையின் பெருமையும் மிகவும் அழகாக விளக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளுக்கு நேரில் அனுபவமாகியிருக்கின்றது. இந்த மலைமேல் மிகப் பெரிய ஒரு ஆல வ்ருக்ஷம் இருப்பதாகவும் அதனடியில் ஸாக்ஷாத் கைலாயபதி, தக்ஷிணாமூர்த்தி திருக்கோலத்தில் தவம் இயற்றுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுந்தர தமிழில் சிவபெருமானைப் பாடிய நாயன்மார்களும், 'வடவாலிருந்து மறையோதும் எங்கள் பரமன்', 'சந்திரன் சடையில் அணிந்த சங்கரன் சாமவேதி' என்றெல்லாம் பாடியுள்ளனர்.

ஒரு ஸமயம், பகவான் பவழக்குன்றிற்கு மேலே, மலைமேல் ஏறி வெகுதூரம் மேலே சென்றார். அது ஸமயம், யாரும் எதிர்பாராதபடி மிகவும் ஆஶ்சர்யகரமாக ஒரு பெரிய ஆல இலை வந்து அவருடைய கால் அடியில் விழுந்தது. அது ஸாதாரணமாக உள்ள ஆல இலையைக் காட்டிலும் அளவில் மிகமிகப் பெரியதாய் இருந்தது. பகவானும், அந்த ஆல இலை எங்கிருந்து வந்து விழுந்தது என்று கவனிக்க, அங்கிருந்தபடியே அவருக்கு அருணாசல மாஹாத்ம்யத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள ''வட ஆல வ்ருக்ஷம்'' தர்ஸனமாகியது. தெய்வ ரகஸியங்களை மேலும் சென்று ஆராய விருப்பமின்மையால் பகவானும் திரும்பிவிட்டார். மேலும், அருணாசல மாஹாத்ம்யத்தில் அந்த மலையின் வடக்கு புறத்தில் நிறைய சுனைகளும், பூந்தோட்டங்களும், ஸ்வர்ணம் உட்பட பல ஐஸ்வர்யங்களடங்கிய சுரங்கங்களும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இவைகளும், பகவானுக்கு அனுபவமாகியுள்ளது.

ஒரு ஸமயம், பகவான் வ்ருபாக்ஷி குகையில் தங்கியிருந்தார். அவருடைய பெருமையை உலகம் அவ்வளவாக உணராதிருந்த காலம்.



ஸநாதன தர்மத்தின்படி ஒரு ப்ராஹ்மணர், உலக வாழ்வில் வெறுப்படைந்து விரக்தி மேலிட்டு, ஆத்ம ஸ்வரூபத்தை அடைவதற்காக ஸந்யாஸ வாழ்வை மேற்கொண்டால், அவர்கள் காஷாய வஸ்த்ரமே தரிக்க வேண்டுமேயன்றி வெள்ளை வஸ்த்ரம் தரித்தலாகாது என்பது நியமம். பகவானோ, வெள்ளை கௌபீனம் மட்டுமே அணிந்து வந்தார். மேலும், ப்ரஹ்மச்சரிய ஆஶ்ரமம், க்ருஹஸ்தாஶ்ரமம், வான ப்ரஸ்தாஶ்ரமம், ஸன்யாஸ ஆஶ்ரமம் என்ற நான்கையும் கடந்த அதி ஆஶ்ரமியாக இருந்து வந்தார். அவ்வமயம், ஶங்கர ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஒரு ப்ரஸித்தியான மடத்திலிருந்து ஒருவர் வந்து பகவானை தரிசனம் செய்தார். அநேகமாக பலர், ஶங்கர ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட, ''அத்வைதம், அத்வைதம்'' என்று பேசி வருகிறார்களே தவிர, ஒருவருக்கும் அது அனுபவத்தில் வந்ததாகக் காணோம். அப்படியிருக்க, பகவான் ரமணரோ, பாலகனாய் இருந்த சிறுபிராயத்திலேயே அத்வைதத்தின் உன்னத நிலையையடைந்து அதி ஆஶ்சர்யகரமாய் வீற்றிருப்பதைக் கண்டு அவர் அதிசயித்தார்.

பகவானை எப்படியாவது தான் ஸார்ந்துள்ள மடத்தைச் சேர்ந்தவராக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று விருப்பப்பட்டார். அதனால், பகவான் ரமணரிடம் காஷாய வஸ்த்ரம், ருத்ராக்ஷமாலை எல்லாவற்றையும் ஸமர்ப்பித்து, 'நீங்கள் எங்களுடைய ஆசாரியரிடம் நேரில் வந்து ஸந்யாஸம் வாங்கிக் கொள்ள வேண்டிய அவஶ்யமில்லை. அவர்தான் என்னை அனுப்பியிருக்கிறார். இங்கேயே நீங்கள் ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளலாம். காஷாயம் கட்டிக் கொள்வதால் உங்களுக்கு ஒரு கௌரவம் கிட்டும். ஶாஸ்த்ர ஸம்மதமும் அதுவேயாகும். மேலும், தாங்களும், எங்கள் மடத்தைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொள்ளலாம். நாங்களும் அங்ஙனமே சொல்வோம். இதனால் உங்களுக்கு பெருமையே, என்று பலவாறாக எடுத்துரைத்தார்.

பகவான், மௌனமாக இருந்த காலமது. அதனால், அவர் கூறியதற்கு பகவான் ஏதும் பதிலுரைக்காமல் இருந்தார். பகவான் மௌனமாய் இருப்பதைப் பார்த்துவிட்டு வந்தவர், 'நான் ஸ்நானம் செய்துவிட்டு அனுஷ்டானங்களையும், ஆகாரத்தையும் முடித்துவிட்டு வருகிறேன். யோசித்து பதில் கூறினால் போதும்' என்று கூறி கிளம்பிச் சென்றார். அதன் பின்பு, ஒரு வயோதிக ப்ராஹ்மணர், பரம வைதீகராய், மஹாதேஜஸ்ஸுடன், கழுத்து நிறைய ருத்ராக்ஷ மாலைகள் அறிந்து புண்ட்ரம், கச்சம், ஶிகை இவைகள் உள்ளவராய் ஒரு புத்தக மூட்டையுடன் பகவான் இருக்குமிடம் வந்தார். பகவானைப் பார்த்து, 'இந்த புத்தக மூட்டையை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளவும், நான்

ஸ்நானம் செய்துவிட்டு வருகின்றேன்' என்று அதட்டும் தோரணையில் கூறிவிட்டுச் சென்றார். இது பகவானுக்கு அதி ஆச்சர்யமாக இருந்தது. 'நம்மை இவ்வளவு உரிமையாக அதட்டுவது யார்!' என்று.

இப்படியிருக்கையில், அந்த புத்தக மூட்டையை திறந்து பார்க்க வேண்டும் என்று பகவானுக்கு ஒரு உந்துதல் ஏற்பட்டது. அதன்படியே திறந்து பார்க்க, அதன் மேலே 'அருணாசல மாஹாத்ம்யம்' என்ற க்ரந்தம் இருந்தது. கை போன போக்கில் அதிலொரு பக்கத்தை திறக்க, அந்தப் பக்கத்தில், இந்த அருணாசல மலைக்கு மூன்று யோஜனை தூரத்திற்குள் யார் வாழ்ந்தாலும், அவர்கள் காஷாயம் கட்டிக் கொள்ளாவிட்டாலும் தீக்ஷை வாங்கிக் கொள்ளாவிட்டாலும் கூட ஸந்யாசிகளே, அவர்களுக்கு மோக்ஷம் கண்டிப்பாக உண்டு. இது என் ஆணை' என்று ஸாக்ஷாத் அருணாசலேச்வரனே கூறுவதாக அமைந்துள்ள ஒரு ஸ்லோகம் இருப்பதைப் பார்த்தார்.

தன்னுடைய காரியங்களை முடித்துக் கொண்டு ஶங்கர ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சீடர் வருகையில், அவருக்கு பதிலுரைக்கும் வகையில் இந்த ஸ்லோகத்தை எடுத்துக் காட்டினார் பகவான். வந்தவரும் அதைப் பார்த்த பின் பதிலேதும் உரைக்க முடியாதபடி சென்று விட்டார். புத்தக மூட்டையை விட்டுச் சென்ற வயோதிக ப்ராஹ்மணரும் திரும்ப வரவேயில்லை. சிறிது நேரத்தில் அந்த புத்தக மூட்டையும் காணவில்லை. இப்படி ஒரு அதிசய ஸம்பவம் பகவானுடைய வாழ்க்கையில் நிகழ்ந்தது.

(தொடரும்)

தொகுப்பு : **முரளீதரதாஸன்.**

# செய்திகள்

### ஜனவரி 23-ந் தேதி முதல் 26-ந் தேதி வரை

பெங்களூர் மல்லேஸ்வரத்தில், ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் ஜயந்தி டிரஸ்ட் சார்பில் ***'ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ்'*** நம் ஸ்வாமிகள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### மார்ச் - 11-ந் தேதி

மாசி மகத்தை முன்னிட்டு திருவிடந்தையில் தீர்த்தவாரி நடைபெறும்.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98

| வேணு:3 | மார்ச் 1998 | கானம்:8 |
| --- | --- | --- |





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar